மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.140/2023</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 02ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.02.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்குரை சொத்து விவரத்தில் நான் எத்தனை அயிட்ட சொத்துக்களை சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால் தடத்தை பொறுத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை சொத்து விபரத்தில் 1வது ஐட்டம் சொத்தாக புல எண்.135/1 சி, புஞ்சை ஏக்கர் 1.32 பி–கள் யாருக்கு பாத்தியப்பட்ட பூமிகள் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட பூமிகள் தாவா மூன்றாவது அயிட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரீ.ச.எண்.136/11 பி1 புஞ்சை ஏக்கர் 63 சென்ட் பூமிகள் எனக்கு பாத்தியப்பட்ட பூமிகள் என்றால் அதை பொருத்து நான் வழக்கு போடவில்லை.

2. நான் இந்த வழக்கில் கேட்டுள்ள தடம் எந்த புலஎண்ணில் செல்கிறது என்றால் புல எண். 136/8 பி, 136/8 ஏ பூமிகளில் செல்கிறது மேற்படிபுல எண். 136/8 பி மற்றும் 136/8 ஏ பூமிகள் பிரதிவாதிக்கு

பாத்தியப்பட்ட பூமியில் என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு கிழமேலில் பைமாஸ் இட்டேர் உள்ளது என்றால் சரிதான். அதை ஒட்டி தான் பிரதிவாதி அவரது வீடு மற்றும் கட்டுத்தரை ஆகியவற்றை அவரது பூமியில் வைத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கிழமேல் இட்டேரியை ஒட்டி அவரது பூமியில் வேலி அமைத்துள்ளாரா என்றால் வேலி உள்ளது. பிரதிவாதி வீட்டிற்கு கிழப்புறத்தில் பிரதிவாதி பூமியில் கிழமேலாக வேலி உள்ளது என்றால் வேலி இல்லை.

3. தாவா சொத்துக்களை பொருத்து நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்துக்களை அளந்து அளவுகளை எழுதினார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் தாவா சொத்துக்களை அளவீடு செய்தது சம்பந்தமாக தனது அறிக்கை மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பிரதிவாதி பூமியில் அவரது அத்தில் தென் வடலாக வேலி மற்றும் மரங்கள் உள்ளதை தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லி உள்ளதை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

4. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றிற்கு நான் எனது வழக்கறிஞர் மூலம் எனது தரப்பில் ஆட்சேபனை ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை பிரதிவாதி பூமியின் தென்புறத்திலும் கிழப்புறத்திலும் மர கிழுவன் வேலி அத்தாக உள்ளது என்றும் நான் வேண்டுமென்றே இந்த வழக்கிற்காக தென்வடல் வேலி பிரதிவாதி பூமியில் இல்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த மரக் கிழுவன்

வேலிக்கு கிழப்புரத்தில் தான் சாலையில் இருந்து தென்வடலாக தாவா தடம் செல்கிறது என்றால் சரிதான்.

5. மேற்படி தாவா தடத்தின் கீழப்புரத்தில் மூன்றாம் நபருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த மூன்றாம் நபர் பூமியில் தாவா தடத்தை ஒட்டி மூன்றாம் நபரின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்றாம் நபரின் வீட்டின் மேல் புற சுவற்றிற்கு மேற்புறத்தில் இரும்பு பில்லர் நட்டு டேங்க் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தாவா தடத்தின் தெற்கோட்டில் இருந்து வடக்கு கோடு வரை உள்ள அளவுகளை அளவீடு செய்து சொல்லி உள்ளார் என்றால் சரிதான். எனது தாவா 1வது அயிட்ட சொத்தான 1 ஏக்கர் 35 சென்ட் பூமிக்கு பைப்லைன் மூலமாக தண்ணீர் பாய்கிறது என்றால் சரிதான்.

6. அந்த பைப்லைன் தாவா தடத்தின் கிழக்கு ஓரத்தில் பூமிக்கு அடியில் வடக்கு நோக்கி சென்று எனது பூமியில் எழுகிறது என்றால் சரிதான். மேற்படி பைப்லைன் எனது பூமியில் எழும் இடத்தை நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் பி2 என காண்பித்துள்ளார் என்றால் சரிதான் பிரதிவாதி பூமிக்கு பைப்லைன் மூலம் தாவா தடத்தை கடந்து கிழுவன் வேலிக்கு மேல் புறத்தில் பிரதிவாதி பூமியில் பைப்லைன் எழுகிறது என்றால் சரிதான். அதிலிருந்து வடக்கு நோக்கி பிரதிவாதி ஒரு வாய்க்கால் அவர் பூமியில் அமைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வாய்க்காலை தான் நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காட்டியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி மஞ்சள் நிற வாய்க்காலுக்கு கிழபுறத்தில் மர கிழுவன் மரங்கள் வரிசையாக உள்ளது என்றால் இல்லை.

7. அதிலேயே பிரதிவாதி வாழை மரங்களும் வைத்துள்ளார் என்றால், பிரதிவாதி இடத்தில் வாழை மரங்கள் வைத்துள்ளார். வாய்க்காலுக்கு கிழபுறத்தில் உள்ள பிரச்சனைக்குரிய தடத்தை தான் நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் ஆமாம். மேற்படி வாய்க்காலுக்கு கிழப்புறத்தில் உள்ள தடத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி எனது பெரியப்பா நாச்சிமுத்து கவுண்டர் என்பவரின் மகன் என்றால் சரிதான். நானும், எனது பெரியப்பாவும் சேர்ந்து கடந்த 1962 ஆம் ஆண்டு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

8. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் தடம் அதன் கிழக்கோட்டில் தடத்திலேயே வாய்க்கால் ஆகியவை கண்டு பாகம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாய்க்காலை தான் தற்போது பூமிக்கு அடியில் பைப் லைனாக நாங்கள் மாற்றிக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி 1962 பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள தடம் தான் தாவா தடம் என்றால் சரிதான். வழக்குரை இரண்டாவது சொத்து விபரத்தில் வண்டி தடம் மற்றும் வாய்க்கால் தண்ணீர் செல்லும் வாய்க்கால் பாத்தியம் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

9. அந்த வாய்க்காலை எப்போது பைப் லைனாக மாற்றினோம் என்றால் 15 வருடங்கள் ஆகிறது. பைப் லைனை பொறுத்து எனது வழக்கில் நான் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். எனது அனுபவத்தில் உள்ள எனது பூமிகளை பொறுத்தும், பிரதிவாதி அனுபவத்தில் உள்ள பிரதிவாதி பூமியை பொருத்தம்

எங்களுக்குள் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான் கிழமேல் பைமாஸ் இட்டேரி தென்வடல் ரோட்டில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் ரீ.ச.எண்.156 ல் உள்ளது என்றால் சரிதான். கிழமேல் பைமாஸ் இட்டேரி ரீ.ச.எண்.137 ல் உள்ளது என்றால் சரிதான்.

10. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2022 முதல் தடத்தை குறுக்காட்டி பிரச்சனை செய்ததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் நிலையில் உள்ள தாவாத் தடத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எந்த பிரச்சனையும் செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது பூமியை விலைக்கு கேட்டு நான் கொடுக்க மறுத்து விட்டதால் பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்ததாக நான் வழக்கத்திற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11. தாவா மூன்றாவது அயிட்ட சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அவசியமில்லாமல் தாவா மூன்றாவது அயிட்ட சொத்தை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒன்றாவது அயிட்ட சொத்திற்கு நிலையில் உள்ள தாவா தடத்தின் வழியாக நான் தடம் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எவ்விதத்திலும் எந்த இடையூறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

12. நான் தான் பிரதிவாதிகளுக்கு இடையூறு விளைவித்து அவர்கள் பூமியை நான் எழுதி வாங்குவதற்காக இடைஞ்சல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட

சமயத்தில் இருந்த தடம் தான் 1962 ஆம் ஆண்டில் இருந்து நிலையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். தாவா தடத்தை பொறுத்து பிரதிவாதிகள் எனக்கு எந்த விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாத நிலையில் நான் அவசியமில்லாமல் அவர்களை கட்சி சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.02 18:53:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்